சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

## சபரகமுவ மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

சபரகமுவ மாகாண அரச சேவையின், மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் வெற்றிடம் நிழவும் மாகாண பணிப்பாளர் பதவிக்கு தகுதியான அதிகாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் நாடு முழுவதும் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | தேவையான தகமைகள் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | வெற்றிடம் காணப்படும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | சபரகமுவ மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் | கால்நடை மருத்துவத்தில் பட்டம் பெற்று இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் தரம் 1 இல் தொடர்ந்து 3 ஆண்டுகள் சேவையாற்றிய அதிகாரியாக இருத்தல் வேண்டும் | 01 | மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்ளம் சபரகமுவ மாகாண சபை |

குறிப்பு – விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதிக்குள் (2025.06.16) குறித்த பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். மற்றும் தகைமையை நிரூபிக்கும் அனைத்து சான்றிதழ்களின் நகல் , தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் நகல்களை விண்ணபத்துடன் இணைக்க வேண்டும்.

### 01.அடிப்படை தகைமைகள்

1. கால்நடை மற்றும் சுகாதார சேவையில் தரம் 1 இல் தொடர்ந்து 3 ஆண்டுகள் சேவையாற்றிய மற்றும் திருப்திகரமான சேவை காலத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.
2. விண்ணப்பித்த திகதிக்கு முந்தைய 05 வருடங்களில் செயலில் மற்றும் திருப்திகரமான சேவையினை பெற்றிருக்க வேண்டும்.
3. அரச சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் விதிகளின் படி எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படுத்தப்படாத நபராக இருத்தல் வேண்டும்.
4. அனைத்து தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

### 02. சம்பள அளவுத்திட்டம்

இந்த பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் அ.நி.சு 10/2025 இல் SL 1 – 2025 – ரூ.82,150-10*2400-8*2940 -17*3900 – 195,970/- ஆகும்.இந்த சம்பள அளவு திட்டத்தில் 20 ஆவது படிநிலை ஆரம்ப சம்பளமாக அமையும்.

### 03.வயதெல்லை

ஏற்கனவே அரசுப் பணியில் உள்ள கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் உள்ள அதிகாரிகளிடம் இருந்து மட்டுமே நாடு முழுவதும் விண்ணப்பங்கள் கோரப்படுவதனால் வயதெல்லைக் கிடையாது.

04.கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்காணலுக்குத் தோன்றுவார்கள். அங்கு மதிப்பெண்கள் சேவை மூப்பு , தகைமை மற்றும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் சிறந்த பங்களிப்பு மற்றும் நிர்வாகத் திறன் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு வழங்கப்படும். அதிக மதிப்பெண்கள் பெற்ற விண்ணப்பதாரர் பதவிக்கு பணியமர்த்தப்படுவார்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மதிப்பெண்கள் பின்வருமாறு வழங்கப்படும்.

சேவை மூப்பு – 50 புள்ளிகள்

தேர்ச்சி - 50 புள்ளிகள்

05.அனைத்து விண்ணப்பப்படிவங்களும் முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்டு 2025.06.16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் திணைக்கள தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரின் ஊடாக (மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணப்பத்தை மாகாண அமைச்சு செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன் ) "செயலாளர் , சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு , மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி , புதிய நகரம் , இரத்தினபுரி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " சபரகமுவ மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் , பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் , பதவிக்குரிய தகமைகளை பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.

06.இவ் ஆட்சேர்ப்பு தொடர்பாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல் , இந்த பதிவி தொடர்பாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

07.இதன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் உள்ள அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டபிள்யு.ஆர்.தினீஷா எஸ்.ரத்னாயக்க,
செயலாளர்,
சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
சபரகமுவ மாகாணம்
2025.05.23.